LIBRARY
2-10-1995
UNIVERSITY OF JAFFNA

Registered at the G. P. O. AS A NEWSPAPER

ஸன்மார்க்கபோதினி.

SANMARKA POTHINI

பத்திரவிலைவிகிதம்
ஒருக்கு ருபா ௨-00
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் ௰
இந்தியாவுக்கு சதம் ௫
பிறதேசங்களுக்கு ௭௫

விளம்பவிலைவிகிதம்
வரி ஒன்றுக்குசதம் 10
௧0 க்குமேல்ஒருவரிக்கு 8
௨0 க்கு மேல்..........9
இணைப்பிரசுர மொவ்வொன்றிற்கும்3-ல் ஒன்று

ஒன்றுவிட்டொரு புதன்கிழமைகளிற்
பிரசுரஞ்செய்யப்படும்

சாதுசங்கஞ் சன்மார்க்க சாதனம்.

Published on every
other Wednesday

VOL. XXXIII. JAFFNA MARCH 7th 1917. No 5

௩௩ம் புத்தகம் யாழ்ப்பாணம் ௧௯௧௭ ம் வரு பங்குனி மீ ௭௨ புதன்கிழமை. சங்கியை ௫

நம்மவரின் முயற்சி.

நம்மவரின் முயற்சியைக்குறித்துச் சென்றபத்திரிகையில் பேசியிருக்கிறோம். அதன் அனுபந்தமாய் மீண்டும் சிலபேசநினைக்கிறோம். சண்டையினால் பிறதேசப்பொருட்கள் வரவுகுன்றவே நாம் மிகு கஷ்டமடையவேண்டியவராயினோம். இத்தருணமாவது நாங்கள் விழிக்கவேண்டாமா?

கைத்தொழில்வகையில் முன்னேறப் பலவழிகளிருக்கும் அவைகள். மேலைத்தேசத்தில் யுத்தசமாதானம் ஏற்பட்டவுடனே நிலைநிற்காமல் நட்டமடையவேண்டியும்வரும். ஆயினும் ரசாயனமுறைப்படி நம்மூரில் பொருள் உற்பத்திசெய்யக் கற்றுக்கொண்டால் அது அசைக்கப்பட மாட்டாதென் றெண்ணுகிறோம். தக்க முதல்சேர்த்து ஒருகொம்பனி உற்பத்திசெய்யப்பட்டால் ஓர் தக்க சாஸ்திரநிபுணரைத் தக்க சம்பளத்தில் ஸ்தாபித்துவிடலாம். நாளடைவில் அவர் நிபுணத்துவத்தை நம்மவர் கற்றுக்கொள்ளலாம். இம்முயற்சி நம்தேசப்பணத்தைப் புறதேசஞ் செல்லவிடாமற் றடுத்துவிடும்.

எவ்வித தொழில்விருத்திக்கும் அநேகம ரசாயனப்பொருட்கள் தேவையாயிருக்கின்றன. அதற்கு சோடாஉப்புவகைதிராவகங்கள் அகத்தியந்தேவை. நெசவுசாலைகளோ தோல்பதனிடுஞ்சாலைகளோ சலவைக்காரஞ்செய்யுஞ்சாலைகளோ கடதாசிசெய்யுஞ்சாலைகளோ எல்லாவற்றிற்கும் இவை தேவை. இவைகளைப் புறதேசங்களிலிருந்து அழைப்பியாமல் இந்தியாவிற்செய்யக்கூடுமென்றும் அதற்கு அரசசகாயம் வேண்டுமென்றும் இந்தியபத்திரங்கள்கூறுகின்றன. நிலக்கரியிலிருந்து செய்யப்படும் சாயமும் இந்தியாவிற் செய்யக்கூடுமாம். பருத்தித்தாளிலிருந்து கடதாசிசெய்யுங்கூழ் உண்டாக்கலாமெனக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

அன்றியும் பம்பாயில் இப்ராகிம் பீர்முகம்மது கம்பனியார் சமீபத்தில் ஓர்கண்ணாடித் தொழிற்சாலை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதைப் பம்பாய்த் தேசாதிபதியும் போய்ப் பார்வையிட்டார். அத்தருணம் தீயில் உருகிய மணற்குழம்பை உருவாக்க 12 வயசுச் சிறுவன் வாயினால் ஊதியதைப்பார்த்து ஆச்சரியமடைந்தாராம். அங்கு செய்யப்படுஞ் சாமான் ஆஸ்திரிய செர்மனிய சாமான்களுக்குத் தாழ்ந்தனவல்லவாம். அப்படியானால் அதை ஆதரித்துவரல் அரசினரின் கடமையல்லவா? யுத்தசமாதானம் ஏற்பட்டவுடனே பிறதேசச் சாமான்வந்து சுதேசகம்பனிகளை முறித்துவிடாமல் அச்சாமான்கள்செய்யும் நிபுணரை உதவியும் அரசினர் அதையேதாமும் வாங்குவதாயும் ஆதரித்தால் பிறதேசவியாபாரம் சுதேசவியாபாரத்தை எதிர்க்க முடியாதல்லவா?

காரியமிவ்வாறிருக்க நாம் ஏன் பிந்திநிற்கவேண்டும்? பருத்தித்துறை மணல் கண்ணாடி செய்யக்கூடுமென்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் நாம் முந்திக்கொள்ளல் விவேகமல்லவா?

பதார்த்தசாரம்.

வேளை. Gynandropsis pentaphylla.

இதில் பலசாதிகளுண்டு. இதனால் வாதம் சுரம் வாய்வு சிரஸ்தாபனரோகம் சரீரநோய் குடைச்சல் சீதளம் மார்புவலி கபரோகம் இவைகள்தீரும். தைலம் வடித்து ஸ்நானஞ்செய்வதுஉத்தமம். இதன்பூமாந்தசுரம் வாதம் வெப்புஇவைகளைத்தீர்க்கும். இதன் இலைகளைத் துவைத்துத் தேகத்தில் அணைத்தால் கொப்பளிக்கும். கொப்புளப்பற்றின் வருத்தம் இதிலிராது. அதனாற் காணும் சகாயம் பெரும்பாலும் இதனாலுங்காணும். காதுக்குத்துக்கு இச்சாற்றை விடுவார்கள். இதன்விரையிலிருந்து எண்ணெய் எடுத்துக் கடுகுத் தைலத்துக்குப் பதிலாய்ப் பாவிக்கலாம்.

வோதலைமரம். Catechu Acacia.

இதைக் கத்தக்காம்புஎன்றுஞ்சொல்வர். இது இந்தியாவின் காடுகளி லுற்பத்தியாகும். இம் மரவைரத்திலிருந்துகருங்காசுக்கட்டிசெய்யப்படும். அதுகருங்கபிலநிறமும் மினுக்கமும் பாரமும் கைப்பும் துவர்ப்புமானது. குடரின் சளிச்சவ்வின் இளக்கத்தாலுண்டாகும் கழிச்சலுக்குஉவப்பானது. முறைச்சுரம் உமிழ்நீர்ப்பெருக்கு முரசுகரைதல் புண்படல் உண்ணாக்குவளர்ச்சி ஈறுவீக்கம் முதலியவைகைக் கொப்பளிக்கும் நீராக வழங்கப்படும். நிலவேம்புக் கஷாயத்துடன்சேர்த்துப் பத்துப் பன்னிரண்டு கிறேன்ஸ்தந் கொடுத்துவர முறைச்சுரந்தீருமெனக் கண்டிருக்கிறது. ஒருஅவுன்சு எண்ணெய்க்கு ஒருகிறாம் காசுக்கட்டிதமாய்ச் சேர்த்துச்செய்த எண்ணெய் பலவகைப் புண்களையும் மாற்றும். அதற்கு மாறுவிடின் ஒருஅவுன்சு தைலத்துக்கு 15 கிறேன் [illegible] சேர்த்து [illegible]. வேறுமருந்துகளுக்கு மாறாத வைரப்புண் குஷ்டம் முதலியவை இதனால் மாறியிருக்கிறதாம்.

கையொப்பவரவு.

அச்சுவேலி	
மா௱ ஸ்ரீ ல. குழைப்பிள்ளை	2—00
" மு. கந்தையாசெட்டியார்	1—00
" சி. செல்லையாபிள்ளை, இக்கம்	1—00
அநுராதபுரம்	
" K. அலெக்சாண்டர்	1—00
கொழும்பு	
K. S. Lawton Eeq.	5—00

யாழ்ப்பாணம்.

ஊர்ச்சீர்—சிறுக மழைபெய்தது. இன்னும் மழைக்கோலமும் இரவில் சிறுகப்பனியு முண்டு. ஊரில் காய்ச்சலாதிய ரோகங்கள் இன்னுமுண்டு.

கிராமச்சங்கப் பிரதிநிதித்தெரிவு—இத்தெரிவு நம்மூரில் சென்ற திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் ஸ்ரீ விசுவநாதர் சின்னத்துரை, ஸ்ரீ கு. யோன் இராசா, ஸ்ரீ சந்திரசேகரர் சின்னத்தம்பி, ஸ்ரீ ஆ. சின்னத்தம்பிஉபாத்தியாயர், ஸ்ரீ சி. முருகேசு, ஸ்ரீ சபாபதி வேலுப்பிள்ளை வைத்தியர் என்பவர்கள் நியோகிக்கப்பட்டார்கள். முந்திய ஐவரும் சர்வசன சம்மதப்படியும் பிந்தியவர் சில சுற்றத்தவர்எதிர்ப்பின் பின்னுந் தெரிந்தெடுக்கப்பட்டனர். இந்நியமனம் திருத்தியானதென்றுசொல்லப் பின்னில்லோம். சனத்தாற்பெருத்தஅச்சுவேலி தெற்குவடக்காரின் அமைதியையும்சனக்குறைவுள்ள வளலாய்ப்பகுதியாரின் பொறுமையையும்நாம்யோசிக்கும்போது அங்குள்ளார் இன்னும் கன்னிலையெய்தவில்லையென்றெண்ணுகிறோம். "தாமுண்ணவிடினும் தட்டிவூற்ற" எண்ணுவதே பேதமை.

சுப்பிரீங்கோடு.

3 வதாய் விளக்கத்தில்வந்த நல்லூர்க் கொலைவழக்கின் எதிரி சிறுவனாகையால் மூன்றுவருட மறியலூழியத் திர்ப்பிடப்பட்டான்.

2 வதாய் விளங்கப்பட்ட தவசி நாகமுத்துவுக்கு மரணத்தீர்ப்பிடப்பட்டபின் யூரிமார் அவனுக்கு இரக்கங்காட்டும்படிகேட்ட கேள்வியைக் கவனிப்போமென்று நீதியாசர்சொன்னார்.

4 வதாய் ஓர் வாணிபன் கைபிழைபாட்டுக்கொலையை ஒத்துக்கொண்டதால் 18 மாச மறியலூழியத் திர்ப்பிடப்பட்டான்.

5 வதாய்ப் புங்குடுதீவுக்கொலைவழக்குவிளக்கத்தில்வந்து யூரிமார் எதிரி படுகாயப்படுத்தினதற்குக் குற்றவாளியெனவே அவனுக்கு நாலுவருஷ மறியலூழியம் விதிக்கப்பட்டது.

6 வதாய்ப் பருத்தித்துறைக் கொலைசெய்ய எத்தனித்தவழக்கு விளக்கத்தில்வந்து எதிரி படுகாயப்படுத்தினதற்குக் குற்றவாளியாய் ஆறுவருட மறியலூழியத் திர்ப்புப்பெற்றான்.

7 வதாய் மட்டுவிலிற்பெண்சோரவழக்கு விளக்கத்தில்வந்தஎதிரிநிரபராதியானான்.

8 வதாய்ச் சுழிபுரக்கொலைவழக்கு விளக்கத்தில்வந்து எதிரி நிரபராதியானான்.

9 வதாய்ச் சுன்னாகம் கொலைவழக்கு விளக்கத்தில்வந்து எதிரி ஏழுவருட மறியற்றீர்ப்படைந்தான்.

இத்துடன் யாழ்ப்பாணக் கிறிமினல்விசாரணைச்சுப்பிரீங்கோடு சமாப்தியாயிற்று.

கள்ளுக்குத்தகை—சென்ற 26ம் 27ம் திகதிகளில் யாழ்ப்பாணக் கச்சேரியில் வருடாந்த கள்ளுக்குத்தகை விலைப்பட்டது. எல்லாம் விலையேறிவிற்றதாம். அரசாட்சியார் மதுவைக்குறைக்க எடுத்தவழிகளெல்லாம்ஏற்றமும்மாற்றமுமாகின்றன. இந்த யுத்தகாலம் கழித்து அப்பால்இதைக்குறித்தநலம் பெருகுமென நம்புகிறோம்.

வைசூரிநோய்—மாதகல் வண்ணார்பண்ணை முதலியவிடங்களில் இந்நோய் ஊசாடுகின்றன. நோயுள்ளோரை விரைவில் அகற்றுவதால் அதிக அனுகூலமுண்டு.

திருட்டு—வண்ணார்பண்ணையில் நாட்டுக்கோட்டைச் செட்டிகள்கடையொன்றில் 100 தங்கப்பவுண்வரையில் களவுபோயிற்றும். உட்கள்ளராரோதிருடியிருக்கவேண்டுமென நம்பப்படுகிறது.

இலங்கை.

உத்தியோகமாற்றம்—கொழும்பில் உதவிஏசன்றாயிருந்த மெஸ், A. P. பூனி யுத்தமுனைசெல்ல அவரிடத்தில் மெஸ், W. K. H. காம்பெலும் அவரிடத்தில் மெஸ், G. F. R. பிறவுனிங் என்பவரும் நியோகிக்கப்பட்டனர். அவிசாவலைப் பொலிஸ்நீதிபதியாயிருந்து சிலகாலம்நிறுத்தப்பட்டிருந்த மெஸ், R. B. ஹிறற் மறுபடி உத்தியோகநிலையிற் சேர்க்கப்பட்டுக் கொழும்பு பொக்கிஷசாலை உத்தியோகஸ்தரானார். உதவி ராசாங்க லிகிதராயிருந்த மெஸ், M. ஸ்றீவின்சன் சைப்பிரஸ்தீவின் லிகிதரானார்.

இந்தியா.

இந்தியறெயில்—தென்னிந்திய புகைரதக்கம்பனி மனேச்சரை வியாபாரசங்க அங்கத்தவர்கண்டு பேசியபோது யுத்தம்முடிந்தபின் உலகத்தின்நிலைமை எவ்வாறிருக்குமென்று தமக்குத்தெரியாதென்றும் ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் சாமான்களில்லையென்று சனங்கள் முறையிடுகிறார்களென்றும் இஞ்சின்வண்டிகள் கெட்டுப்போயின, அவைகள் சீர்திருத்தப்படவுமில்லைப் போக்குவரவை நிறுத்தவேண்டுமென்ற எண்ணத்தின்பேரில் கட்டணவிகிதம் உயர்த்தப்பட்டது, வண்டித்தொகை குறைக்கப்பட்டது என்றும் சொன்னாராம்.

அரக்கு—ஆயுதஉற்பத்திக்கு அரக்கு (பொன்மெழுகு) தேவையானதால் உத்தரவின்றி அரக்கு ஏற்றுமதிசெய்யக்கூடாதென்றும் அரக்குவியாபாரிகளின் சம்மதப்படி அவர்களிடமிருக்கும் அரக்கில் 100 க்கு 20 வீத அரக்கைக் குறைந்த விலைக்கு அரசாட்சிக்குக்கொடுக்கவும் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கிறது.

டில்லிக்குட்புகக்கூடாது—மெஸ், விபின்சந்திரபாலர் டில்லிமாகாணத்துட் பிரவேசிக்கக்கூடாதென்று அரசாட்சியார் கற்பித்துவிட்டார்கள்.

நீர் அசௌக்கியமாய் இருக்கிறீரா?

எந்தவிதமான வாதையினாலாவது உமக்கு அசௌக்கியம் உண்டானபோது, நீர் "நான் தினந்தோறும் ஒரு தடவையாவது கொல்லைக்குப் போய் வருகிறேனா?" என்று கேட்டுக்கொள்ளவேண்டும். "இல்லை" என்று ஏற்பட்டால், (இராத்திரி படுக்கைக்குப்போகும் போது) டோன் என்பவருடைய ஜீர்ண மாத்திரைகளில் (டோன்ஸ் டின்னர் பில்ஸ்) இரண்டு அல்லது மூன்று நீர் எடுத்துக்கொள்ளும். மறுநாள் காலையில், மலசுத்தி சகஜமாய் ஆகும். சுகமுண்டாகும். மலபந்தம் என்பது என்னவென்றால், மலம் குடலில் தங்கவேண்டிய காலத்திற்கு அதிகமானகாலந் தங்கி, விஷத்தன்மையுள்ள வஸ்துக்களை யுண்டாக்கி விடுவதேயாம். இந்த விதமான மலபந்தத்தினாலேயே இந்த உலகத்தில் கணக்கில்லாத ரோகங்கள் பிறக்கின்றன. ஆகையால், கீழே குறித்திருக்கிற ரோகங்கள் பலவும் மலச்சிக்கலினாலேயே உண்டாகின்றன என்றுஅறிந்துகொள்ளவேண்டும். பித்தப்பை ரோகங்கள், பித்தம், பித்தக்காய்ச்சல், அஜீர்ணம், பசிமந்தம், தைர்யவீனம், அசதி, இதயவாதை, தலைச்சுற்றல், தலைநோய், வயிற்றுப்பசம், இரைப்பையிற்புளிப்பு, ஸ்திரீகளுக்கு உண்டாகும் ரோகம் முதலானவை. மலபந்தம் நீடித்திருந்தால், இரத்தம் கெட்டுப்போய், தேகசௌக்கியம் கெட்டேபோகும். (டோன்ஸ் டின்னர் பில்ஸ்) டோன் அவர்கள் ஜீர்ணமாத்திரைகள் மூலிகைகளினாலேயே தயாரானவை.

இம்மாத்திரைகள், குடலிலிருந்து மலத்தையும், விஷவாயுவையும் வெளியாக்கி, பித்தப்பையைச் சரிப்படுத்தி, பித்தநீரைத் தாராளமாய்ப் பெருகச்செய்து, தேகத்தைச் சௌக்கியமும் அழகுமுள்ளதாக்கும். இம்மாத்திரைகள் புருஷர் ஸ்திரீகள் சிறுவர்கள் ஆகிய எல்லாருக்குமே சரீரவாதையைச் சீக்கிரத்திலே நீக்கிச்சுகம் உண்டாக்கும்.

DOAN'S
DINNER
PILLS

12 அணா புட்டியளவு.

விலை அணா 4, 8, 12 உள்ள புட்டிகள் வாங்கலாம். 12 அணா புட்டியில் 60 மாத்திரை இருக்கும். 4 அணா புட்டியைவிட 5 பங்கதிகம் இருக்கும்.

இவை, சீமை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜெண்ட் ஆண்டப்பிலியு. எச். ஹல்லர் துரையவரிடத்திலும், கிடைக்கும். [Tms.

யுத்த தந்தி.

Summarised
From the "Times of Ceylon"
and the Madras "Swadesamitran"

பிரான்சுபெல்சியசெர்மனியயுத்தம்.

17உ ஆர்மண்டைசுக்கு வடகிழக்கில் சத்துருப்படையொன்று நமதரணிற்புகுந்தும் திருப்பியடித்துவிட்டோம். வியாழக்கிழமைநடந்த ஆகாயச்சண்டையில் செர்மன்விமானங்கள் கீழேவீழ்த்தப்பட்டிருக்கின்றன. நமதுவிமானங்களில் 4 காணாமற்போயின. அமர்தலவில்லர் என்றஇடத்தில் பிரான்சியபடையொன்று செர்மனியரின் கோணத்திற்புகுந்து அவர்கள்அரண்களை அடியோடு நாசப்படுத்திப் பலரைச்சிறைபிடித்துத்திரும்பின.

பெல்சியத்தில் செர்மனியர் சுறுசுறுப்பாயிருக்கின்றனர். அங்குள்ள எல்லாப்புகைரத வீதிகளையும் ராணுவஅதிகாரிகள்கைப்பற்றிக்கொண்டனர். ருமேனியா சேர்வியா ருசியா முதலிய போர்முகங்களிலின்று பிரான்சுக்கு செர்மனிய படைகளைக்கொண்டுவந்துகுவிக்கின்றனர். இன்னும்செர்மனியிலும் சேமப்படைகள் இருக்கின்றனவாம். அவர்கள் வாலிபர்என்றும் சரீரபலமும் சன்மார்க்கமுடையர்என்றும் ஆனால்அச்சேனைகளின் உத்தியோகஸ்தர் அனுபவமற்றவர்களென்றும் பிரான்சுபெல்சியத்திலுள்ள போர்முனைகளில் சென்ற கார்த்திகைமாசத்தில் 128 படைவகுப்புகளிருந்தனவென்றும் தற்போது 166 படைவகுப்புக்களை வைத்திருக்கிறார்களென்றும் டைமஸ்பத்திரிகைக்கு ராணுவநிருபர்தெரிவித்திருக்கிறார்.

18உ சென்ற சனிக்கிழமை ஆங்கர்நதிப் போர்முகத்தில் 774 பேரைச் சிறைபிடித்தோமென்று பிரித்தானியசெய்திகூறுகிறது.

19௨ செர்மனியர் உக்கிரமாய்ப்போர்செய்தனர் சிறைபிடிக்கப்பட்டவர்கள் பிரித்தானியபீரங்கிப்படையை மிகப்புகழுகிறார்கள். சத்துருக்களுக்குமிகுசேதமென்கிறார்கள். இச்சண்டையில் பிரித்தானியரின்செயம் முக்கியமானது. அதற்குத்தக்கபடி பிரித்தானியருக்கும் வெகுசேதமென்று ஓர்நிருபர் தெரிவித்தார்.

20௨ பலத்தபீரங்கிப்பிரயோகஞ்செய்து நமது அரண்களைநாசப்படுத்திப் பலத்த உதவிப்படைகளுடன்கூடிய செர்மன்படையொன்று டிரான்ஸ்லாய்க்குத்தெற்கில் நமது முன்னணிப்படையைத்தாக்கிற்று ஆர்மண்டயர் எப்பிராசுக்குக்கிழக்கிலும்சத்துரு ஸ்தலங்களிற்பிரவேசித்து வெகு சேதமுண்டாக்கினேமென்று பிரித்தானிய செய்தி கூறுகிறது.

பிரிரேக்கு வடக்கிலும் வாட்வில்லருக்குமேற்கிலும் பிரான்சர் சத்துருக்களைத்தாக்கிப் பலரைச் சிறைபிடித்துக்கொண்டுதிரும்பினர்.

21௨ கொண்டிகோட்டுக்கு வடகிழக்கிலுள்ள அரண்களில் ஒருபாகத்தைக்கைப்பற்றி ஆர்மண்டீசுக்குத்தெற்கே 650 யார் தூரமான போர்முகத்தில் வெகுதூரம்பிரவேசித்துச்சேதம்விளைத்து 500 யார் தூரமான அரணைத்தாக்கி அனேகரைக் கொன்று சரங்கங்களையும் அரணகளையும் குழிகளையும் நாசப்படுத்தி 114 பேரைச்சிறைபிடித்தோம். நமக்குசேர்ந்தசேதம் சொற்பமென்று பிரித்தானிய செய்தி கூறுகிறது.

23௨ தைமீ 1௨யிலிருந்து மாசிமீ 19௨ வரையில் பிரித்தானியரிடம் 1600 பேர் சிறைப்பட்டனர்.

24௨ இடைவிடாது நாம்நெருக்கியதால் ஆங்கர்நதியில் சில முக்கியஸ்தலங்களை விட்டுப்போய்விட்டார்கள்; மிராவ்மாண்டுக்குத் தெற்கிலும் தென்கிழக்கிலும் முன்னேறி அவ்வூருட்பிரவேசித்துவிட்டோம்.

25௨ சத்துருக்கள் ஆங்கர்நதிப்பக்கத்தில் பின்னிடுகிறார்கள், கீழ்ப்பாகத்தில் சில முக்கியமான இடங்களை நமதுபடைகள் கைப்பற்றின. வீஸ்டிராட்டுக்குக் கிழக்கில் 55 பேர்களைச் சிறைபிடித்தோம்.

26௨ சனிக்கிழமைச்சண்டையில் செர்மனியர் 3 மைல்தூரம் பின்சென்றதாக ஒருநிருபர் கூறுகிறார்.

27௨ மீண்டும் நாம் முன்னேறி ஸ்பார்க்கைக்கைப்பற்றி பியுசே லுமாண்ட் எனுமிடத்திற்குமேற்கிலும் வடக்கிலும் நம்ஸ்தலங்களைப் பெலப்படுத்தினோம். ஆர்மண்டீசுக்குக்கிழக்கிலும் சத்துரு அரண்களிற்புகுந்து தற்காப்புஸ்தானங்களுக்குப்பெருஞ்சேதம்விளைத்தோமென்று பிரித்தானியச்செய்தி கூறுகிறது.

ஆங்கர்நதிக்கரையில் செர்மனியர் வெகுதூரம் பின்னிட்டது பிரித்தானியரின் நெருக்கடியே எனப்படுகிறது. அங்கு சில பலமானகோட்டைகளைப் பிரித்தானியர் இரத்தஞ்சிந்தாமல் பிடித்ததைக்குறித்துச் சந்தோஷிக்கிறாராயினும் பிரித்தானிய சேனையாற்சூழப்படுந்தருணத்திருந்ததால்பின்னிட்டாரென்றும் சிலவேளை இப்படிப்பின்னிடுவதால் ஐக்கியசேனைகள் தம்மை வலுவிற்றுக்கமுயற்சிப்பதை மாற்றவெண்ணிப் பின்னிட்டிருக்கலாமென்றும் சிலசமயம் தக்கசேனைகளைச் சேர்த்துவந்து தாக்க நேரத்தைச் சம்பாதிப்பதற்காகப் பின்னிட்டிருக்கலாமென்றும் பலவாறாய் நிபுணர் எண்ணுகின்றனர்.

வெயிலிக்குத்தென்கிழக்கில் பிரான்சர் தாக்கிப் பலசத்துருக்களைச் சிறைபிடித்தனர்.

26௨ சத்துருவிமானங்களில் 3 வீழ்த்தப்பட்டன. நமது ஆகாயவிமானிகள் சத்துருக்கள் தங்குமிடங்களிலும் விமானக்கொட்டகைமேலும் ரெயில் ஸ்டேசன்கள்மேலும் குண்டுகளைஎறிந்து சேதம்விளைத்தனரென்று பிரான்செய்தி கூறுகிறது.

பங். 2௨ நமதுசேனைகள் கிரிஎன்னுமிடத்தைச் சுற்றிலும்நின்றுவருகிறார்கள். இந்த ஸ்தலம்பாபோம் என்னுமிடத்துக்கு மேடாகவுளதாகையால் செர்மனியர் அங்கே நிலைபெற்றுநின்றுவிட முடியாமல் நமதுபீரங்கிப்படைகள் செய்துவிடக்கூடும். பாபோம் என்னுமிடத்திற்குச்செல்லும் பிரதானதெருவைச் சத்துருக்கள் வெகுவாய்ச் சேதப்படுத்திவிட்டார்கள். அந்தப்பாதையை நமதுதுருப்புக்கள் பழுதுபார்த்துச் சீர்படுத்த முடியாதபடி இடைவிடாது பீரங்கிப்பிரயோகஞ் செய்துகொண்டிருக்கிறார்கள்.

மாசிமாதத்தில் நாம்சத்துருக்களிடமிருந்து 36 ஆபீசர்களுட்பட 2133 பேரைச்சிறைபிடித்திருக்கிறோம். சத்துருக்கள் இன்னும் பின்னடைந்துகொண்டிருக்கிறார்கள். பிரோமாண்ட்என்னுமிடத்துக்குவடக்கில் ஒன்றரைமைல் விஸ்தீரணமுள்ள போர்முகத்தில் 600 யார்தூரம் நாங்கள்முன்னேறியிருக்கிறோம். லௌசஸ் என்னுமிடத்துக்குத்தெற்கில் சத்துருக்கள்மீது விஷக்காற்றையுண்டுபண்ணுங் குண்டுகளைப்பிரயோகித்தோம். லியன்கோர்ட் ராங்கோர்ட்என்றஇடங்களில் நமதுஅரண்களைச் சத்துருக்கள் தாக்கினார்களெனினும் அவர்களை உடனே திருப்பியடித்துவிட்டோம்.

நீர்க்கீழோடும் (சப்மரீன்) கப்பற்கொடுமைகளையடுத்தசெய்திகள்.

லண்டன் மாசி 15௨ செர்மன்சக்கிரவர்த்தி காபர்க் என்றஇடத்தில் செர்மன் கவிவாணரான மூல்லர் என்பவரைக்கண்டு பேசியபோது நெப்போலியன் அரசுசெய்தகாலத்தில் ஐரோப்பாமுழுவதையுங் கடலடைப்புச்செய்ய மனோபாவம்பண்ணினாரென்றும் அது தற்போது உண்மையாய் நிறைவேறியிருக்கிறதென்றும் இதற்குமுன் எக்காலத்திலாவது ஏற்பட்ட கஷ்டங்களைவிட இங்கிலாந்துக்குத் தற்போது அதிககஷ்டங்கள் நேரிட்டிருக்கிறதென்றும் நீதியும் சன்மார்க்கமும் செர்மனியர்பக்கத்திருக்கிறதென்றும் அவைகளைக் காப்பாற்றச் செர்மனி பரிசுத்தமான ஒவ்வோர் ஆயுதத்தையும் உபயோகப்படுத்த வேண்டுமென்றுஞ் சொன்னாராம்.

சீனு செர்மனியுடனிருக்கும் ராசபந்தநேசத்தை நீக்கிவிடத் தீர்மானித்திருப்பதால் பிரித்தானிய அதிகாரிகளுள் திருத்தியுண்டாயிருக்கிறது.

17௨ செர்மன் கடலடைப்பைப்பரீட்சிப்பதற்காகஅமரிக்க கப்பற்காம்பனியார் செர்மனியரால் குறிக்கப்பட்ட எல்லைக்குட் பிரவேசிக்கும்படி அனுப்பியிருக்குங் கப்பல்கள்சந்தித்தால் உடனே தாட்சணியமின்றிச் சப்மரின்மூழ்கடித்துவிடுமென்று செர்மன் பத்திரிகைகள் எழுதுகின்றன.

14௨ சென்ற 15 தினங்களில் செர்மன்சப்மரீன்களுக்குநேர்ந்த சேதம் அதிகமென்றும் சப்மரீன்களைக்கொண்டு நடபடி நடத்தவேண்டுமென்று முன் செர்மன் அரசாட்சியைத்தாங்கிப்பேசியவர்கூடத் தற்போது அதனாற் பிரயோசனமில்லையென்பதை ஒப்புக்கொள்ளுகிறாரென்றும் ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

16௨ செர்மன் சப்மரீன்கொடுமைகளையடக்கப் பிரித்தானிய கடற்படை என்னசெய்திருக்கிறதென்று வெளியாய்ச் சொல்லக் கூடாது. அப்படிச்சொன்னால் சத்துருக்களுக்கு வாய்ப்பாயிருக்கும், கப்பற் போக்குவரவில் ஆபத்துநேரிடாதிருத்தற்கான காரியங்கள் மிகுதிப்படுத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. அவை கடற்படையதிகாரிகளுக்கன்றி மற்றோர்க்குத்தெரியாது. இதனால் ஏற்படும்முடிவுகள் நன்மையாயிருக்குமென்று பொதுசனங்கள் தாராளமாய் நம்பியிருக்கலாம். சத்துருக்கள் தம் எதிரிகளை அடக்கமுடியாமற்போனதே மத்தியஸ்தநாட்டு வியாபாரக்கப்பல்களையும் காயமடைந்தவர்களையும் நோயாளிகளையும் ஏற்றிச்செல்லும் ஆஸ்பத்திரிக்கப்பல்களையும் நட்டமடைந்தவர்களுக்கு உதவிசெய்யச்செல்லுங் கப்பல்களையும் மூழ்கடிக்கப் புறப்பட்டிருக்கிறார்கள். நாகரீகசனங்களுள் ஏற்பட்ட சட்டத்தையும் வழக்கத்தையும் அனுசரித்துச் சண்டைசெய்ய அவர்களால் முடியாமற்போயிற்று. அவற்றை மீறிநடந்தால் செயமேற்படுமென்று செர்மன்சனங்களும் மத்தியஸ்தநாடுகளும் நம்பும்படி அவர்கள்மனதில் தப்பபிப்பிராயத்தையுண்டாக்கியிருக்கிறார்கள். இவ்வித கொடுமைசெய்ய முன்வந்தும் நாம் நமதுகாரியத்தை நிறைவேற்றிவருவது நமது வியாபாரக்கப்பல்களின் சாமார்த்தியத்துக்கு அத்தாட்சியாகும். நட்டம் அடியோடே நேரிடாமல் தடுப்பது பிரித்தானிய கடற்படையால் முடியக்கூடியகாரியமல்ல, ஆயினும் பிரித்தானியரின் ஐக்கியஅரசுகளுக்குப் பிரித்தானிய அரசு செய்யக்கூடிய கடமைகளைச் செய்துவருவதும் போர்முகங்களிலுள்ள சேனைகளுக்கு மருந்துகளையும்தளபாடங்களையும் அனுப்பிவருவதும் இதுவரையில் கூடியதாயிருந்ததுபோலவே இனிமேலுங் கூடுமென்ற உறுதியான நம்பிக்கையிருக்கிறது. அத்துடன் மத்தியஸ்ததேசக் கப்பல்களின் போக்குவரவுக்கும் கடலிற் குறிப்பிட்டபாதைகள் பாதுகாக்கப்பட்டுவருமென்பது நிச்சயம் எனக் கடற்படை அதிகாரிகளுளொருவரான லோர்ட் ஸ்ற்றன் சொன்னார்.

14௨ கடந்த மார்கழிமாசமுதலில் எத்தனை கப்பல்கள் தற்காப்புக்குரிய ஆயுதக்கப்பல்களாக்கப்பட்டனவோ அதைவிட 100 க்கு 50 வீதம் தற்போது ஆயுதமேற்றப்பட்ட வியாபாரக்கப்பல்களாக்கப்பட்டதென லோட் கர்சன் சொன்னார்.

20௨ செர்மனியின் சப்மரின்செய்கையைக்குறித்து ஆஸ்திரியாவின்நோக்கம்என்னவென்பதைத் தெரிவிக்கும்படியும் முன் ஆஸ்திரியாகொடுத்த உறுதிமொழியை மாற்றிவிட்டதாவென்றும் அமரிக்கா ஆஸ்திரியாவைக் கேட்டிருக்கிறது.

பிரேசில் அரசாட்சியார் தம்தேசக் கப்பல்கள் ஐரோப்பாவுக்குப் புறப்பட்டிருப்பதாயும் போகும்வழியைச் செர்மனிக்குத் தெரிவித்திருப்பதாயும் அவைகளுக்கு ஆபத்துநேரிடின் நியாயஞ்சொல்ல முடியாதென்றும் தெரிவித்திருக்கிறது.

21௨ செர்மனியின் சப்மரின் கொடுமைகளால் இங்கிலாந்தில் இறக்குமதி குறையவில்லையென்றும் நோர்வே சுவேதன் ஒல்லாந்துமுதலிய மத்தியஸ்தநாடுகளின் வியாபாரம் குறைந்துவிட்டதென்றும் அத்தேசங்களின் கப்பல்கள் வழக்கம்போல இங்கிலாந்துக்குவர அஞ்சுகின்றனவென்றும் அக்கப்பல்கள் பிரித்தானியரால் சோதனைசெய்யப்படுதற்காகவே அங்குவரவேண்டியிருக்கிறதென்றும் அப்படிவராவிடின் நடுக்கடலிற் சோதனைசெய்யநேரிடும், அது அவர்களுக்குத்தொந்தரவாகும் என்றும் அதனால் காலிபக்ஸிலும் நோவாஸ்கோடியாவிலும்வந்து சோதனைசெய்துபோக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றனவென்றும் லோட் சிசில் அமரிக்க நிருபரொருவருக்குத் தெரிவித்தார்.

மத்தியஸ்தநாடுகளின் கப்பல்கள் பிரித்தானிய துறைமுகங்களுக்கு வாராமற்சென்றால் சத்துருதேசச் சாமான்களை ஏற்றிச்செல்வதாய்க் கருதப்படுமென்றும் பிரித்தானியதுறைமுகங்களுக்கு வந்துசெல்லுங்கப்பல்கள் சத்துருதேசச்சாமான்களை ஏற்றிச்சென்றாலும் அதன்பொருட்டுக் கண்டிக்கப்படாதென்றும் பிரித்தானியர் தீர்மானித்திருக்கின்றனர்.

21௨ பார்லிமெந்துச்சபையில் எட்வாட்கார்சன் பிரித்தானிய கடற்படையை விருத்திசெய்யும்பொருட்டுக் குறிக்கப்படாததொகையைச் செலவிடக்கேட்டபோது இன்னும் 400000 பேர் கடற்படையிற்சேர அனுமதிகொடுக்கவேண்டுமென்றும் சென்ற ஐப்பசிமாசம்வரையில் 80 லட்சம் பேர் கடற்படையில்சேர்க்கப்பட்டிருக்கிறார்களென்றும் 95 லட்சம் டன்கள் நிறையுள்ளவெடிமருந்துகள் இங்கிலாந்திற்செய்து வெளியேற்றப்பட்டதென்றுஞ்சொன்னார். சண்டையாரம்பத்திலிருந்து பிரித்தானியகடற்படை 25874 கப்பல்களைச் சோதனைசெய்திருக்கிறது. சப்மரின்கொடுமை கவலைக்குரியதுதான். அதையடக்க ஏற்பாடுகளுஞ்செய்யப்பட்டிருக்கின்றன. சென்ற மார்கழிமீ முதல்தேதியிலிருந்து 18ந் திகதிக்குள் 201000 டன்நிறையுள்ள ஐக்கியராச்சியக்கப்பல்களும் மத்தியஸ்தநாட்டுக்கப்பல்களுமாக 69 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. தைமாசத்தில் 182523 டன் நிறையுள்ள 65 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. மாசிமாசத்தில் 268681 டன்நிறையுள்ள 89 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன, மாசிமீ 1ந் திகதியிலிருந்து 18௨ வரையில் இங்கிலாந்துக்கு 6176 கப்பல்கள் வந்திருக்கின்றன. 5873 கப்பல்கள் புறப்பட்டிருக்கின்றன. அபாயத்துக்குரியதெனக் கருதப்படுங் கடல்களிலும் எச்சமயத்திலும் சராசரி 3000 கப்பல்கள் போக்குவரவு செய்திருக்கின்றன. ஆயுதந்தரித்த வியாபாரக் கப்பல்களில் 100க்கு 74 வீதமும் ஆயுதந்தரியாத கப்பல்கள் 100க்கு 24 வீதமுஞ் சேதமடையாமல் திரும்பிவந்தன. இனிமேல் இங்கிலாந்துக்குவருங்கப்பல்கள் செல்லுங்கப்பல்கள் தாக்கப்பட்டுத் தப்பிவந்தகப்பல்களின்பெயரும் பிரசுரஞ்செய்யப்படும். செர்மனியர் தம் சப்மரின்களுக்கு நேர்ந்த சேதத்தை வெளியிடுவதில்லை. பிரித்தானியர் கடந்த மாசிமாசம் 40 சப்மரின்களோடு சண்டைசெய்ய நேரிட்டது. அவைகளின்கதி யின்னவாயிற்றென்று தெரியவில்லை. புதியகப்பல்கள் கட்டுவதில் மிகுமுயற்சியெடுக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் கடற்படையின் தொல்லையைக் குறைப்பதற்காய்ப் பிரித்தானியசனங்கள் இறக்குமதியைக்குறைக்க உடன்படவேண்டுமென்றுபேசினார்.

24௨ தண்ணீருள் மூழ்கிச்செல்லும் குரூசர்க்கப்பல்கள் செர்மனியின் சப்மரீன்களுக்குதவியாய்ச்செல்லுமாம். 5000 டன்நிறையுள்ளதும் மணியொன்றுக்கு 26 மைல்தூரம் ஓடக்கூடியதும். 30 டொர்பிடோபீரங்கிகளும் வேண்டும்போது மறைக்கக்கூடிய 22 பீரங்கிகளமைக்கப்பட்டதுமான சப்மரீன்களைச் செர்மனியர் உபயோகிப்பார்களென்று ஓர்நிருபர்தெரிவித்தார்.

26௨ செர்மனி சப்மரினால்கடலடைப்புச்செய்திருப்பதை ஒருபோதும்நீக்காதென்றும் சேதம் நேரிட்டால் பிரேசில் அரசாட்சி சிநேகப்பான்மையாய்ச் செர்மனியுடன் விவாதத்தைப்பேசித்தீர்த்துக்கொள்ளலாமென்றும் செர்மனியிலுள்ள பிரேசில்தேச ஸ்தானாபதிக்குச் செர்மனி தெரிவித்தது.

28௨ அமரிக்காவிலிருந்து பரீட்சிக்கும்படிவந்த கப்பல்களில் ஆர்லீக்ஸ் பிரான்சுக்குவந்துசேர்ந்தது. அக்கப்பற்றலைவர் பிரான்சிற்கொண்டாடப்பட்டார்.

பங். 1திகதி நியுயோர்க்கிலிருந்துவந்த ரக்கஸ்டாஎன்ற அமரிக்ககப்பலும் பிரான்சைச்சேர்ந்துவிட்டது.

மூழ்கடிக்கப்பட்ட கப்பல்கள்.

லண்டன்தந்தி.

17௨ காப்டன் கிற்லண்ட் கோப்மூர் லியானெட் லாக்ஸ்கார் என்றபிரித்தானியகப்பல்களும் வேறு 4 சிறுகப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. இவற்றின் மொத்தநிறை பதினாயிரம் டன்.

19௨ 7000 டன் நிறையுள்ள வேர்ஸஸ்டர்ஷயர் என்றகப்பல் மூழ்கடிக்கப்பட்டுப் போனதாய் நம்பப்படுகிறது. அதனிலிருந்த 43 பிரயாணிகளும் சேமமே காக்கப்பட்டுப்போனார்கள். இரங்கூன் சிரேஷ்டநீதியரசர் சர் சார்லஸ்பாக்ஸ்சும் 9 ஸ்திரிகளும் அதிற் பிரயாணஞ்செய்தார்கள். 3 மாலுமிகளைக் காணவில்லை, அதில் 50 ஐரோப்பியரும் 93 லஸ்கர்களும் வேலையாயிருந்தார்கள். கம்பியில்லாத்தந்தி ஸ்தாபனமுள்ளது.

வேடிஆன் மேரிலியான்கார்ட் மேரியண்டர்சன் க்வீனாஸ்வுட் ராம்ஸ்டாலன் வால்டஸ என்றபிரித்தானியகப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. வேறிரு சிறிய பிரித்தானியகப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. வேர்ஸஸ்டர்ஷயர் கப்பலுட்பட மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களின் மொத்தநிறை 20000 டன். இக்கப்பல்கள் தாக்கப்பட்டதினால் அனேகர் கொல்லப்பட்டும் காயப்பட்டும் காணாமலும்போனார்கள்.

20௨ அயோலோ ஓகேமண்ட் என்றஇரண்டு பிரித்தானியகப்பல்களும் வேறிரண்டு சிறிய பிரித்தானியகப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. இவற்றின் மொத்தநிறை 8000 டன்களுக்கதிகம்.

21௨ கேற்று மயோலா என்ற மீன்பிடிவத்தையில் ஒன்றே மூழ்கடிக்கப்பட்டன, அக்கப்பல் நியூசிலாண்டைச்சேர்ந்தது.

22௨ பிரைசேட் என்ற சிறிய பிரித்தானியகப்பலும் சென்டேரியன் என்ற பிரித்தானியபாய்க்கப்பலொன்றும் மூழ்கடிக்கப்பட்டன.

23௨ ரோஸ்லேக்கப்பலில் 9 மாலுமிகள்மாத்திரம் காக்கப்பட்டார்கள். ஆபீசருட்பட 21 பேர் கொல்லப்பட்டனர். கார்கோவின் தலைவரும் பிரதான இஞ்சினீயரும் இரண்டுமாலுமிகளும் சிறைபிடிக்கப்பட்டார்கள். மற்றோர்கரைசேர்க்கப்பட்டார்கள்.

23௨ ஜோன்மைல்ஸ் என்ற பிரித்தானிய கப்பல் மூழ்கடிக்கப்பட அதிலிருந்து காயமடைந்த நால்வரும் 2 பிரேதங்களும் கரைசேர்க்கப்பட்டன. 14 பேர் போனஇடந் தெரியவில்லை.

சீனுவிலிருந்து பிரான்சுக்குக் கூலிகளை ஏற்றிச்சென்ற அதோஸ் என்ற பிரான்சத் தபாற்கப்பல் மத்தியதரைக்கடலில் மூழ்கடிக்கப்பட்டுப் போயிற்று. அக்கப்பலுக்குக் காவலாய்ச்சென்ற இரண்டுகப்பல்களும் உதவிக்குச்சென்ற ஒருபீரங்கிக்கப்பலும்அக்கப்பலிலிருந்தசனங்களில் 1450 பேர்களைக் காப்பாற்றின. அதிலிருந்த ஓர் அமரிக்கபாதிரியாரும் மூழ்கிப்போனார்.

24௨ ஜாண்டிசிக் ஹார்டர்சி பெம்லாண்ட்கன் டர்லாண்ட் ஜகாட்ரா மெனுடோ காண்டோயஸ் என்ற ஒல்லாந்தகப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. அக்கப்பல் மாலுமிகள் கரைசேர்க்கப்பட்டனர். இக்கப்பல்களின் மொத்தநிறை 2800 டன். இக்கப்பல்கள் அங்கிலோகால்வாயில் மூழ்கடிக்கப்பட்டன. பிரித்தானியருடன்கலந்து யோசியாமல் தம்மெண்ணப்படி அனுப்பப்பட்டன. இக்கப்பலை ஆழ்த்தியதைக்குறித்து ஒல்லாந்த பத்திரிகைகள் மிகக் கடிந்தெழுதுகின்றன. இக்கப்பல்கள் பிரித்தானியராற் சோதனைசெய்யும்படி பால்மௌதுக்கு வந்ததென்றும் பத்திரமாய்ச்செல்லும்பாதையைப் பிரித்தானியரிடம் வினவியறியவில்லையென்றுந்தெரிகிறது.

மூழ்கடிக்கப்பட்டதாய் அறிவிக்கப்பட்ட மொனுடோக்கப்பல்சேமமாய்த்துறைமுகஞ்சேர்ந்தது.

25௨ சுவேதன் பெரியபாய்க்கப்பலை மூழ்கடித்ததைக்குறித்து சுவேதனில் ஆத்திரமுண்டாயிருக்கிறது. செர்மனியருக்குச் சாதகமாய்ப்பேசிவந்த பத்திரிகையும் செர்மனி நட்டங்கொடுத்து மன்னிப்புக்கேட்டாலும் போதாதென்கிறது.

23௨ நேற்றுஒருநாளில்மாத்திரம் 18000 டன் மொத்த நிறையுள்ள கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டனவாம்.

24௨ சலோனிக்காவுக்குச் சேனைகளை ஏற்றிச்சென்ற மைனுஸ என்றகப்பல் சென்ற 15௨ சப்மரினால் மூழ்கடிக்கப்பட்டது. சேனைகளில் ஓர்பகுதி காப்பாற்றப்பட்டார்கள்.

பெல்சிர், வாத்பீல்ட் என்ற பிரித்தானிய நீராவிக்கப்பல்களும் இன்வாக்ளாட் என்ற வத்தையொன்றும் வேறிரு சிறுவத்தைகளும் மூழ்கடிக்கப்பட்டன. அவற்றின மொத்தநிறை 9000 டன்.

26௨ 18000 டன்நிறையுள்ள "லாகோனியா" என்ற பிரித்தானியகப்பல் எச்சரிப்பின்றிமூழ்கடிக்கப்பட்டது. இது நியுயோர்க்கிலிருந்து லிவர்ப்பூலுக்குவந்தது. பிரயாணிகளுட்பட அதிலிருந்த 270 பேர் காப்பாற்றப்பட்டனர்.

27௨ அதிலிருந்த மாலுமிகளில் 20 பேர் அமரிக்கர். வேறு 6 அமரிக்கபிரயாணிகளுமிருந்தனர் அதிலிருந்து காணமற்போன 9 பேரில் 8 பேரும் படகுகளிலிறங்கியபின் குளிரால் இறந்தனர், 2 அமரிக்க ஸ்திரிகள் மாண்டுபோயினர்.

28௨ பெனிசன்ட் இசர் பார்லுன் கிரேனேடியா லாங்கர்ஸ்ட் டிரோசான் பிரின்ஸ் ஆகிய கப்பல்கள் சென்றவாரத்தில் மூழ்கடிக்கப்பட்டதாய்த் தெரிகிறது. கிரேனேடியர்க்கப்பல்மாலுமிகளில் 6 பேர் கொல்லப்பட்டனர். இக்கப்பல்களின் மொத்தநிறை 14000 டன்.

28௨ மாசிமீ 25௨யுடன்முடிந்த வாரத்தில் இங்கிலாந்தின் துறைமுகங்களுக்கு 2280 கப்பல்கள் வந்தன. 2262 கப்பல்கள்போயின. பிரித்தானிய கப்பல்களில் 1600 டன்களும் அதற்கதிகமான நிறையுள்ளதுமான 15 கப்பல்களும் அதிற்குறைந்தவற்றில் 6 கப்பல்களும்மூழ்கடிக்கப்பட்டன. 12 வியாபாரக்கப்பல்கள் தாக்கப்பட்டும் தப்புவித்துக்கொண்டன. 4 மீன்பிடிக்கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன.

27௨ அல்சியர்ஸ் அரீஸ் டோராதி என்ற பிரித்தானியகப்பல்களும் வேறிருபிரித்தானிய சிறுகப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன. லாகோனியாக்கப்பலுட்பட மூழ்கடிக்கப்பட்டகப்பல்களின் மொத்தநிறை 27000 டன்.

இங்கிலாந்து.

செயம்பெறுவோம்—18௨ மான் சேஸ்றரில் தொழிற்கட்சிமந்திரி ஹெண்டேசன் பேசியபோது செயம்பெறுவோமென்றநம்பிக்கை நம்மவர்க்கு இப்போதிருப்பதுபோல் எப்போதுமில்லை கோடைகாலத்தில்கடும்போர்செய்து ஐக்கியஅரசுக்குத்திருத்தியாய் சண்டைமுடிவுக்கு வருமெனத்தாம் நம்புவதாய்ச்சொன்னார்.

பால்டன்கடகரில் லோட்டர்பி பேசியபோது யுத்தம்கடுமையாயும் நீடித்தும் நடைபெறுமென்றும் பிரித்தானியசனங்கள் இன்னுமதிகமாய்த்தன்மறுப்புக்காட்ட வேண்டுமென்றும் செர்மனிக்குஇன்னும் திரளான சேனைகள் கைவசமிருக்கின்றவென்றும் அதைவெல்ல நாம்பெரியமுயற்சிசெய்யவேண்டுமென்றும் வரும்ஆறுமாசத்தில் நெருக்கடியான நிலைமைவருமென்றும் லகுவிலநாம்செயித்துவிடமுடியாதாயினும் செயமடைவது நிச்சயமென்று உறுதியாய்நம்புவதாயும் சொன்னார்.

யுத்தக்கடனுக்குப் பணம்—புதைத்துவைக்கப்பட்டிருந்த தங்கம் ஒருபோதுமில்லாதவிதமாய் யுத்தக்கடனுக்குப் பணங்கொடுப்பதற்கென்றே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது சண்டர்லாண்டு தபாலாபீசில் இரண்டுதினங்களில் 2000 பவுண்நாணயமாகச்சேர்ந்தது ஸ்வான்சி தபாலாபீசில் 4000 பவுனும்சேர்ந்ததாம் ரெக்காம் என்றஇடத்தில் ஒருகுடியானவன் 100 பவுண் நாணயமாய்க்கொடுத்தான் லிங்கானில்விறகுகாறன் 350 தங்கப்பவுண்கொடுத்தான் அனேகர் தம்தரித்திரநிலைமையைத்தெரிவித்து 2 ஷிலின்முதல் 10பவுண்வரையில் நன்கொடைகொடுத்தார்களாம்.

20௨ சமாதானவிருப்புள்ள பார்லிமெந்துப்பிரதிநிதிகள் பார்லிமெந்தில் பேசியதற்கு மெஸ், பொனர்லா பதிலளித்தபோது சண்டைசெய்து செயித்துச் சமாதானத்தை நிலைநாட்டவேண்டியதைத்தவிர வேறுவிதமாய்ச் சமாதானமாக வழியிருப்பதாய்த் தெரியவில்லையென்றும் ஐக்கியஅரசுகளின் சமாதான நிபந்தனைகளைக் கண்டித்தும் செர்மனியின் நிபந்தனைகளைப்பற்றி எதுங்கூறாமலிருக்குங் கட்சியாரைக் கடிந்தும்பேசினார். குற்றங்களைச்செய்தாற் பிரயோசனமுண்டாகாதென்று செர்மனிக்குக்கற்பிக்கும்படி நாம் சண்டைசெய்கிறோம். சதுரங்கம் ஆடுபவன் எப்படி ஆழ்ந்தயோசனையுடன் புள்ளிகளை கோர்த்தி ஆடத்தொடங்குவானோ அவ்வளவு யோசனையுடன் செர்மனி சண்டைக்குப்புறப்பட்டிருப்பதாய் நான் நம்புகிறேன். நாம் இச்சண்டையை நடத்திமுடித்தால் இனிமேல் சண்டைப்பயம்ஏற்படாதென்றுஞ்சொன்னார்.

அவசரமானால் 50 வயதுள்ளவர்களும் இங்கிலாந்தில் கட்டாய ராணுவசேவகத்துக்கு அழைக்கப்படுவார்களாம்.

இங்கிலாந்தில் உணவுப்பொருட் செய்கைக்குத் தேவையான நிலங்களை அரசாட்சிகட்டாயமாய்க் கைப்பற்றப்போகிறதாம்.

23௨ பார்லிமெந்தில் மெஸ்லாயிட்ஜார்ஜ் பேசியபோது கப்பல்போதியளவு கிடைக்காத கஷ்டத்தைத்தவிர்த்திக்க வழிதேடவேண்டுமென்றும் ஐக்கியராச்சியங்களின் செயம் அதிற்றங்கியிருக்கிறதென்றும் நமதுகப்பல்களில் 10 லட்ச டன்நிறைக்கு அதிகமானகப்பல்களைப்பிரான்சுக்கு உதவியிருக்கிறோமென்றும் ருசியாவுக்கும் இத்தாலிக்கும் திரளான கப்பல்களை உதவியிருக்கிறோமென்றும் தொகையானகப்பல்கள் இதுவரையில மூழ்கடிக்கப்பட்டனவென்றும் சனங்களுக்குவேண்டிய கப்பல்கள்மாத்திரமல்ல இராணுவகாரியங்களுக்குவேண்டிய கப்பல்களும் கைவசமில்லையென்றும் நம்சாதிதன்மறுப்புக்காட்ட வேண்டும் உணவுப்பொருட்கள் உற்பத்திசெய்யவேண்டும் புதியகப்பல்களைத் தொகையாய்க்கட்டவேண்டுமென்றும் கப்பல்கட்டுவதற்கான சாதனங்களைக்குறித்தும் உணவுப்பொருள் இறக்குமதியைக் குறைத்தலைக்குறித்தும் தேயிலையிறக்குமதிசெய்வதைத் தடுத்தலைக்குறித்தும் சாராயஇறக்குமதியைக் குறைத்தலைக்குறித்தும் பேசினார்.

24௨ பூவேலைசெய்தவுடைகள் செயற்கைப்பூவுகள் தோல் சணல் பாய்கள் பட்டாடைகள் பொச்சை வர்ணப்பாத்திரங்கள் வாசனைகள் பருத்தியுடைகள் இங்கிலாந்தில் இறக்குமதி செய்யக்கூடாதெனத் தடுக்கப்படுகிறது சகலபொருட்களும் விலையேறிவிட்டது. இலங்கைத்தேயிலை இறக்குமதியுந்தடுக்கப்பட்டது செர்மனிய யுத்தமறியற்காரருக்கும் சாதாரண சனங்களுக்குக்கொடுக்கும் உணவளவுகுறைத்துக் கொடுக்கப்படும்.

26௨ இன்று அதிகாலையில் செர்மனிய டிஸ்தி

ரோயர்க்கப்பல்கள் பிராட்ஸ டேர்ஸ் என்னுமிடத்திலும் பார்கேட்என்றஇடத்திலும் குண்டுகளைப்பிரயோகித்ததாய் சேர் எட்வார்ட் கர்சன்பார்லிமேந்திற்தெரிவித்தார்.ஒருஸதிரியும்ஒருகுழந்தையும்கொல்லப்பட்டும் வேறிருவர்காயப்பட்டும் போனுர்கள். 2 வீடுகள்சேதப்பட்டன. பிரித்தானிய டிஸ்திரோயர் காவற்கப்பல்களிலொன்று நேற்றுமாலே அநேகசத்துரு டிஸதிரோயர்க்கப்பல்களை இரவு 11 12 மணிவரையிற் சந்திக்கப்பீரங்கிகளைக்கொண்டும் டொர்பிடோக்குண்டுகளைக்கொண்டும் கடலில்சண்டைநடந்து நமதுடிஸதிரோயர்க்கப்பல்கள் சேதப்படவில்லை. இருளினுல்சத்துருக்கப்பல்களுக்கு நேர்ந்தசேதம் தெரிந்துகொள்ளவில்லை வேறேர்கூட்டம் டிஸதிரோயர்க்கப்பல்தற்காப்பற்ற பிரடேஸ் டோஸ மார்கேட் என்றஇருஇடங்களிலும் பீரங்கிகளாற்தாக்கின வெடிச்சத்தங்கேட்டுநமதுபடைகள் நெருங்கிச்செல்லுமுதலே சத்துருக்கப்பல்கள் திரும்பிப்போய்விட்டன.

பங்குனி 1௳. இன்றுகாலே பிராட்ஸ்டோஸ் என்றஇடத்தில் சத்துருவிமானமொன்று வெடிக்குண்டுபோட்டதால் ஒருஸ்திரி காயமடைந்தாளென்று தெரிவிக்கப்பட்டது.

பார்லிமெந்தில் மெஸ, பாரஸ்டர்பேசியபோது சென்ற இரண்டுமூன்று மாசங்களாய்ப் பிரான்சிய போர்முகத்தில் 3000 பேர் சிறைபிடிக்கப்பட்டனரென்றும் ஆங்கர்நதிக்கரையில் விடாமல் நெருக்கியதால் சத்துருக்கள் 12 மைல் தூரமுள்ள போர்முனையில் 2 மைலபின்னிட்டுவிட்டார்களென்றும் சத்துருக்கள் பிடிவாதமாய்க் காத்துவந்த சில முக்கிய ஸ்தலங்களுட்பட 13 கிராமங்களைக் கைப்பற்றினேமென்றும் சத்துருக்கள் தற்காப்பிலிருந்து யுத்தஞ்செய்யும்படி தமதுசேனைகளுக்கு வற்புறுத்தியிருக்கிறர்களென்றும் சொன்னுர்.

1௳ மாசிமீ 4௳ வடகடலில் சரக்கத்திற்பட்டு அதிலுள்ள யாவருடனும் ஒரு டிஸதிரோயர்க் கப்பல் ஆழ்ந்துபோயிற்று.

சேர்மனியும் அமரிக்காவும்.

17௳ யர்ரோடேல்கப்பலில் பிடித்துக்கொண்டுபோகப்பட்ட அமரிக்கபிரசைகளைச் செர்மனியர் விடுதலைசெய்துவிட்டதாகப் பத்திரிகைகள் கூறுகதால் அதன்உண்மையை அறிந்தபின்மேல்நடபடிகளைநடத்தலாமென்று அமரிக்க ஐக்கியஅரசாட்சியார் தீர்மானித்திருக்கின்றனர்.

பெல்ஜியத்தில் பிரசல்ஸ்நகரில் அமரிக்க ஸ்தானுபதியின் ஆபிசில் ஏற்றப்பட்டிருந்த அமரிக்க கொடியை இறக்கிவிடச்செர்மனியர் உத்தரவுசெய்துவிட்டார்கள்.

18௳ அமரிக்காவுக்கும் செர்மனிக்கும் யுத்தம் நேரிடின் செர்மனியிலுள்ள அமரிக்கபிரசைகளையும் பொருட்களையும்.செர்மனிபாதுகாக்கவும்.அமரிக்காவிலுள்ள செர்மனியரையும்பொருட்களையும் அமரிக்கா பாதுகாக்கவும் 199ம் வருஷத்தில் அவ்விருதேசங்களுக்கும் ஏற்பட்டஉடன்படிக்கை இப்போதும் இருகட்சியையுங் கட்டுப்படுத்தக்கூடியதாயிருந்துவருகிறதென்று அமரிக்கஅரசு வெளிப்படுத்தியிருக்கிறது. சண்டைநேர்ந்தால்அமரிக்கஅரசு தம்மிடமுள்ள செர்மன்கப்பல்களைக் கைப்பற்ற அல்லது உபயோகிக்கமாட்டாதென்று அமரிக்கஅரசு ஏலவேவெளிப்படுத்திவிட்டார்கள்

பாசிபிக் சமுத்திரக்கரையின் பாதுகாப்புக்காக 50 சப்மரின் புதிதாய்ச்செய்ய அமரிக்க கடற்படையதிகாரிகள் தீர்மானித்துவிட்டார்கள். எல்லோரும் ராணுவபயிற்சி செய்யவேண்டுமென்று ஒருசட்டம் அமரிக்கபார்லிமெந்தில் கொண்டுவரப்படும்.

22௳ அமரிக்கா செர்மனியுடன் சண்டைக்குப் புறப்படும்படி பிரசாதிபதிகேட்கமாட்டாரெனினும் அமரிக்க வியாபாரக்கப்பல்களுக்குச் சேதமுண்டாகாதுகாக்கதமக்குஅதிகாரங்கொடுக்கும்படியும்அதற்காக 500 லட்சம்டலர்கடனுங்கேட்பாராம்

அமரிக்காவுக்கு செர்மனியறிவித்தபதிலில் செர்மன்கப்பல்களை அமரிக்காகைப்பற்றுதென்றுதெரிவித்தவுடனே யார்ரோடேல் கப்பற்பிரசைகளைவரையும் விடுதலைசெய்துவிட்டதாய்த் தெரிவித்திருக்கிறது.

21௳ செர்மனியிலிருந்து புறப்பட்ட அமரிக்க ஸ்தானுபதிகள் செர்மன் உத்தியோகஸதரால் அற்பவிஷயங்களுக்காக வெகு தொந்தரவுசெய்யப்பட்டனராம். அவர்கள் ஸபானியாவைச்சேர்ந்துவிட்டனர்.

21௳ இங்கிலந்து சம்பந்தமான இராணுவ செய்திகளையும் பிரதிமைப்படங்கள் மாதிரிகள் முதலியவற்றையும் அமரிக்காமூலமாய்ச் செர்மனிக்கு அனுப்ப முயற்சிசெய்தகுற்றத்தில் அமரிக்காவில் இருவர் பிடிக்கப்பட்டிருக்கின்றனர். இதில 15 பேர் சம்பந்தப்பட்டிருக்கிறர்களென்று தெரிகிறது. பத்திரிருபர்போல் இங்கிலந்துக்குச்சென்று வேண்டியவிபரங்களை உளவறிந்து வந்திருக்கிறர்களாம்.

22௳ நியுயோர்க்கில் ஏழைஸ்திரிகளின் பிரதிநிதிகளான மூன்றுகூட்டத்தார் முனிசிப்பால்றித் தலைவரைக்கண்டு உணவுப்பொருட்களின் விலையேற்றத்தைக் கண்ணீருடன்தெரிவித்து அதற்காக 10 லட்சம்டலர்கள் செலவுசெய்யும்படிகேட்டார்கள். யோசித்து அப்படியே செய்வதாக வாக்கிட்டார்.

23௳ அமரிக்காவிலிருந்து உணவுப்பொருட்களை ஏற்றுமதி தடைசெய்யவேண்டி ஆகாரப்பஞ்சமேற்பட்டதாய்க் கலகஞ்செய்யும்படி செர்மனியர் தூண்டிவிட்டதாய் நம்பப்படுகிறது.

பிரசாதிபதியிடம் முறையிட்ட கூட்டத்தாருக்கு 4000 பவுண் கொடுக்கப் பட்டதாம். 2500 பேர்கள் சேர்ந்து பில்டெல்பியாவில் உணவுப் பஞ்சத்தைக்குறித்துக் கலகஞ்செய்ததில் ஒருவன் கொல்லப்பட்டு 14 பேர் காயமடைந்தனர். இது செர்மனியரின் தூண்டுதலென்று நம்பப்படுகிறது

நியூபிரிட்டன், கன்னெக்டிகட்முதலியஇடங்களில் ஆயுதஉற்பத்தித் தொழிற்சாலைகளில் ஆச்சரியமான விபத்துக்கள் உண்டாயின. ராணுவச்சட்டம் நிரூபிக்கப்பட்டது. ஒகிகோவில் ஆயுதத்தொழிற்சாலையை வெடிவைத்தழிக்கமுயன்று டினமைன்ற் வெடிக்குண்டுகள்வைத்திருந்த இரண்டுதுருக்கர் கைதிசெய்யப்பட்டனர்.

